பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 14 | செவ்வாய்க்கிழமை | 30.07.2024 | கதிர் 265

# ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவில்லை மொட்டு தனி வேட்பாளரை நிறுத்தும்

## பொது ஜன பெரமுன நேற்றுக் கூடித் தீர்மாமனம்

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராக போட்டியிடவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என மஹிந்த ராஜபக் தலைமையிலான ஸ்ரீ லங்கா பொது ஜனபெரமுன திட்டவட்டமாக தீர்மானம் எடுத்துள்ளது.

மொட்டுச் சின்னத்தில் பொது ஜன பெரமுனவின் உறுப்பினரை களமிறக்க ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கட்சியின் நிறைவேற்றுக் குழு மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக செயற்படும் தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு முன்வைக்கப்பட்ட யோசனையும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. வேட்பாளர் யார் என்பதை இவ்வாரத்துக்குள் நாட்டு மக்களுக்கு அறிவிப்பதற்கு இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குமாறு ☞ 2



## இது ரகசியம் அல்ல!

நடிகர் வடிவேலுவின் பாணியில் சொன்னால் "நம் ராஜதந்திரங்கள் அனைத்தும் வீணாகிவிட்டனவே" என்பதுதான் ஜனாதிபதி ரணிலின் தற்போதைய நிலை. தன்னை ஒரு பொது வேட்பாளராக நிறுத்தி, மொட்டுக் கட்சியின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு அவர் எடுத்த பகிரதப்பிரயத்தனங்கள் அனைத்தும் வீணாகிவிட்டன.

முள்ளில் விழுந்த சேலையைத் தூக்கிப் போடுவதைப் போன்று ராஜபக்சக்கள் தமக்குச் சேதாரமில்லாமல் ரணிலைத் தூக்கிப் போட்டுவிட்டார்கள். மொட்டுக் கட்சியின் நேற்றைய கூட்டத்தில் தாம் அமைதியாக ☞ 2

## சிறந்த தீர்மானம்: நாமல் சிலிர்ப்பு

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்று தமது கட்சி எடுத்த முடிவு சிறந்ததொரு தீர்மானம் என்று பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

பொது ஜன பெரமுனவின் நிறைவேற்றுக்குழுக்கூட்டம் நேற்றைய தினம் நிறைவடைந்ததன் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சி என்ற அடிப்படையில் நாம் சிறந்த தீர்மானத்தினை எடுத்துள்ளோம். அடுத்துவரும் நாட்களில் எமது கட்சியின் உயர்மட்டக்குழு ஏனைய வேட்பாளர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர். அதன்போது எடுக்கப்படும் தீர்மானத்தினை நாம் எதிர்காலத்தில் அறிவிப்போம்.

ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்காக நான்கு , ஐந்து பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன. எனினும் எமது தரப்பைப் பாதுகாக்கக்கூடிய சிறந்த வேட்பாளரை நாம் முன்னிறுத்துவோம். தற்போதைய அமைச்சரவையில் இருந்து வெளியேறி ஜனாதிபதிக்கு எதிராக போட்டியிடும் ஒருவரும் எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் உள்ளார்.

நாம் ஒழுக்கத்தைப் பேணவேண்டும். கட்சி என்ற வகையில் அண்மைய காலத்தில் நாட்டின் நிலமைகளை மையப்படுத்தி நாம் ஒழுக்க ☞ 2

## தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

தபால் மூல வாக்களிப்புக்கு தகுதி பெறும் வாக்காளர்கள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2024.08.05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல் ☞ 8

## ரணிலுக்கு இன்னும் 52 நாட்களே உண்டு

### உதயங்க இளக்காரம்

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னும் 52 நாட்கள் மட்டுமே உள்ளன என்று ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவரும் ராஜபக்சக்களின் உறவினருமான உதயங்க வீரதுங்க ☞ 8

## ரணிலை பெரமுன கைவிட்டால் சஜித்தே தேர்தலில் வெல்வார்

### எஸ்.பி.திஸநாயக்க ஆருடம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொது ஜன பெரமுன ஆதரவு வழங்காவிடின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தேர்தலில் வெற்றிப்பெறுவார். அவ்வாறான நிலை ஏற்பட்டால் 2022 ஆம் ஆண்டு நிலவரமே மீண்டும் ஏற்படும் என்று ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் அல்லது அவருக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் பலமுறை எடுத்துரைத்துள்ளோம்.

கட்சியின் ஒரு தரப்பினர் மாத்திரமே கட்சியின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். ஸ்ரீ லங்கா பொதுஜன ☞ 2

## 50 லட்சம் வாக்குகளை பெற்று வெல்வதே எமது ஒரே நேக்கம்

### வேட்பாளர் விஜேதாச ராஜபக்ச தெரிவிப்பு

சுதந்திரக் கட்சியின் 50 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாவதை இலக்காகக் கொண்டே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றேன் என்று ஜனாதிபதி வேட்பாளர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார்.

அமைச்சுப்பதவியை துறக்கும் அறிவிப்பை விடுத்ததன் பின்னர் நீதி அமைச்சில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் 1994ஆம் ஆண்டில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட அனைத்து ஜனாதிபதிகளும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வாக்குகளின் அடிப்படையிலேயே தெரிவாகினர். 2019இல் கோத்தாபய ராஜபக்சவுக்கு அளிக்கப்பட்ட 69 இலட்சம் ☞ 8

## கொழும்பு துறைமுகத்தில் பெரு வேகமான வளர்ச்சி

2024ஆம் ஆண்டில் 23.6% எனும் வேகமான வளர்ச்சி விகிதத்தைப் பதிவுசெய்ததன் மூலம் கொழும்பு துறைமுகம் செயல்பாட்டுச் செயல்திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ☞ 8

## பொலிஸ் மா அதிபர் உடன் பதவி விலகவேண்டும்

### மக்கள் போராட்ட இயக்கம் வலியுறுத்து

தேசபந்து தென்னகோனுக்கு எதிராக உயர் நீதிமன்றம் விதித்துள்ள தடையுத்தரவுக்கு அமைய பொது மக்களின் வரிப்பணத்தை பயன்படுத்தி தொடர்ந்தும் அவரை பொலிஸ் திணைக்களத்தில் ☞ 2

## சாதி, மத அரசியலை ஒதுக்கிவிட்டு நாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணைக

### வஜிர அபேவர்த்தன எம்.பி. அழைப்பு

சாதி, மத,அரசியல் கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டைக்கட்டியெழுப்பும் தேசியத் திட்டத்துக்கு இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் இந்த நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு ☞ 2

## பொலிஸ் மா அதிபர் மீதான தடை ஜனாதிபதித் தேர்தலை பாதிக்காது

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

பொலிஸ் மா அதிபருக்கு உயர்நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடை தேர்தல் பணிகளுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று சுதந்திர மக்கள் சபையில் பிரதிநிதியும், பாராளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் ☞ 2

## பொது நிகழ்வுகளில் ரணில் பங்கேற்பு; ஆணைக்குழுவின் கவனம் தேவை

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளரான பின்னரும் அரச பொது நிகழ்வுகளில் கலந்துகொள்வது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர் ☞ 8

## பொலிஸ் மா அதிபர் விவகாரம் சபாநாயகரும் பிரதம நீதியரசரும் பேசித் தீர்க்கக்கூடிய விடயமல்ல

### விஜயதாச ராஜபக்ச கருத்து

பொலிஸ் மா அதிபர் விவகாரம் சபாநாயகரும் பிரதம நீதியரசரும் கலந்துபேசி தீர்க்கக்கூடிய பிரச்சினை அல்ல என்று முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

நீதிஅமைச்சில் ☞ 8

## இனி இது .....

இருந்துகொண்டு மற்றவர்களைப் பேசவிட்டதுமட்டுமல்லாமல் வாக்கெடுப்புவேறு நடத்தி தமது கட்சிக்குள்வெறும்11பேர்மட்டும்தான் ரணிலுக்குஆதரவாகஇருக்கிறார்கள் என்று காட்டி வென்றுவிட்டார்கள்.

மொட்டுக் கட்சியின் அரசியல் சபைக் கூட்டம் நேற்றுத் தொடங்கியபோது அதில் 79 பேர் கலந்துகொண்டிருந்தனர். மொத்தம் 82 பேர் அதன் உறுப்பினர்கள். வந்திருந்தவர்கள் ஆளும் தரப்பில் அமைச்சர்களாக இருப்பவர்கள் உள்ளிட்ட 11 பேரைத் தவிர வேறு எவரும் ரணிலுக்கு ஆதரவாக இருக்கவில்லை.

அதுமட்டுமல்ல ரணிலுக்குத் தொடர்ந்தும் ஆப்படிப்பதி-லும் மொட்டுக் கவனமாக இருக்கிறது. அதற்காக ஒரு அந்தக் கட்சி ஒரு தீர்மானத்தையும்எடுத்திருக்கின்றது. கட்சியின்முடிவுக்குமாறாகஅதாவது கட்சிநிறுத்தப்போகும்வேட்பாளரை ஆதரிக்காது வேறு ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவாகப் பணி செய்பவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதே அந்தத் தீர்மானம். அதனை எதிர்த்து வெறும் 6 பேர் மட்டுமே வாக்களித்திருக்கிறார்கள்.

நேற்றைய கூட்டத்தில்மொட்டுக் கட்சியின்ஜனாதிபதிவேட்பாளர்யார் என்பது தீர்மானிக்கப்படவில்லை. அதுஅனேகமாகஇந்தவாரத்திற்குள் அறிவிக்கப்படும்என்றுஎதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சி நாமல் ராஜபக்சவின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதையும் மொட்டுத் தலைவர்கள் அடுத்த தலைமுறைப் பயணத்திற்குத் தம்மைத் தயார்ப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள் என்பதையும் பறைசாற்றியதாக அதில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர். நாமலும் கட்சியின் செயலாளர் காரியவாசமும் ஒரே பக்கம் நிற்கிறார்கள்.

ரணிலை எதிர்த்து அரசியல் செய்தால்தான் சரிவிலிருந்து மீளமுடியும் என்று நாமல் தரப்பு நம்புகின்றது. இனவாதத்தைக் கையிலெடுப்பது குறித்து இந்தத் தரப்பு இன்னும் சிந்திக்கவில்லை என்றாலும் தேசப்பற்று என்பதைக் முன்னிறுத்தி ரணிலின் காலை வாருவதில் இந்தத் தரப்புக் கவனமாக இருக்கின்றது. தனியார் மயமாக்கல், பொருளாதாரத் தாராளமயமாக்கல் என்பவற்றை இந்தத் தரப்பு தொடர்ந்து எதிர்க்கும். அது ரணிலுக்குத் தலையிடிதான்.

முதற்கோணல் முற்றும் கோணல் என்பதைப் போன்று ரணிலின் "தெரிந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி" கனவுப் பயணத்தில் முதலிலேயே அவர் பெரும் அடி வாங்க வேண்டியவராகியுள்ளார். அதிலிருந்து மீண்டு வெற்றியை நோக்கி அவரால் முன்னேற முடியுமா என்பது அடுத்த ஒன்றரை மாதங்களில் தெரிந்துவிடும்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கப்பட்ட யோசனைக்கு கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியதை தொடர்ந்து கட்சியின்சிரேஷ்ட உறுப்பினர்களான பிரசன்னரணதுங்க,மஹிந்தானந்த அளுத்கமகே உட்பட முன்னிலை உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களின் நிலைப்பாடு தவறானதாக அமையும்போது அதனை ஏற்க முடியாது.இந்த தீர்மானத்தினால் கட்சி பிளவடையும் எனவும் எதிர்வு கூறியுள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இறுதித்தீர்மானத்தை எடுப்பதற்காக பொதுஜன பெரமுனவின் நிறைவேற்று குழு அக்கட்சியின் தலைவரும்,முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்றுக் கூடியது.

கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள மஹிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற நிறைவேற்று குழு கூட்டத்தில் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஷில் ராஜபக்ஷ உட்பட அக்கட்சியின் 70 உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர்.

ஜனாதிபதித்தேர்தலில்பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவரை களமிறக்குதல் தொடர்பிலும்,ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக களமிறக்குவது தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.ரணில்விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்று ஒரு தரப்பினரும்,கட்சியின்உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்று பிறிதொரு தரப்பினரும் தமது நிலைப்பாட்டை குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஷில் ராஜபக்ஷ,ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண் டிருந்த நிலையில் அவர் சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவதாக அறிவித்துள்ளமை முற்றிலும் தவறானது.

2022 ஆம் ஆண்டு எவ்வித நிபந்தனைகளுமின்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினோம்.ஆனால் கடந்த 2 ஆண்டுகாலமாக அவர் பொதுஜன பெரமுனவின்கட்சிக்குமுன்னுரிமை வழங்கவில்லை. மாறாக வீழ்ச்சியடைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியை எமது ஆதரவை கொண்டு பலப்படுத்தி பொதுஜன பெரமுனவை பலவீனப்படுத்தவே முயற்சிக்கிறார். இதற்கு இடமளிக்க முடியாது.

காபந்து அரசாங்கத்தில் பொதுஜன பெரமுனவுக்கு பிரதமர் பதவியை வழங்குமாறு விடுத்த கோரிக்கைக்கு அவர் சாதகமான பதிலை வழங்கவில்லை.அத்துடன் பொருளாதார மீட்சிக்காக அவர் எடுக்கும் தீர்மானங்களுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க முடியாது.அவரது கொள்கைக்கு தொடர்ந்துஒத்துழைப்புவழங்கினால் கட்சிமுழுமையாகஇல்லாதொழியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்று கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் யோசனை முன்வைத்துள்ளார்கள்.ஆகவே பெரும்பான்மையான நிலைப்பாட்டுக்குஅமையவேதீர்மானம்எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராககளமிறக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கும் பிரசன்ன ரணதுங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தவிர்த்து தகுதியுள்ள வேட்பாளர் ஒருவர் கிடையாது.ஆகவே நாட்டு மக்களின் நிலைப்பாடு பற்றி கவனம் செலுத்துஙங்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தவிர்த்து பிறிதொரு வேட்பாளரை களமிறக்கினால் நிச்சயம் தோல்வியடைவோம். பொதுஜன பெரமுனவின் வேட்பாளருக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள்வாக்களிக்கமாட்டார்கள்.2019 ஆம்ஆண்டுநிலைவரமேதோற்றம் பெறும் என்று கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான நிலையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரை மொட்டுச் சின்னத்தில் களமிறக்க வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட யோசனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டால்அவரைஜனாதிபதிவேட்பாளராக களமிறக்கலாம் அவருக்கு ஆதரவு வழங்கலாம் என்று அறிவுறுத்தினோம் ஆனால் அவர் அதற்கு மதிப்பளிக்க வில்லை.கட்சி என்ற ரீதியில் முழுமையாக விட்டுக் கொடுத்து செயற்பட முடியாது என ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.இந்த கூட்டத்தில் கலந்துக் கொண்ட 79 பேரில் 11 பேர் மாத்திரமே கட்சியின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள்.

நிறைவேற்றுக் குழு கூட்டம் நிறைவடைந்தன் பின்னர் ஊடகங்களுக்குகருத்துதெரிவித்தபொதுஜன பெரமுனவின் பொதுச்செய லாளர் சாகர காரியவசம், நாட்டின் ஒற்றையாட்சி,தேசிய வளங்களை பாதுகாத்தல்உள்ளிட்டகாரணிகளை அடிப்படையாகக் கொண்டே கட்சியின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராககளமிறக்கதீர்மானித்துள்ளோம்.எமது தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.வேட்பாளர் யார் என்பதை இவ்வாரத்துக்குள் அறிவிப்போம் என்றார்.

## பொலிஸ் மா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பு பேரவையின் செயற்பாடுகளில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாடாளுமன்றத்தில் செயற்படும் ஏனைய குழுக்களைப் போன்று நாடாளுமன்றப் பேரவை செயற்படுவதில்லை. ஆகவே அரசமைப்புப் பேரவையின் செயற்பாடுகளில் நீதிமன்றம் தலையிட முடியும்.

அரசமைப்பு பேரவை நிறைவேற்றுத்துறையின்ஒருபகுதிஎன்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். மறுபுறம் பேரவை சட்டவாக்கத்தின் ஒருபகுதி என்று பிரதமர் குறிப்பிடுகிறார். ஆகவே அரசமைப்பு பேரவை குறித்து ஆளும்தரப்பு இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

பொலிஸ்மாஅதிபர்விவகாரத்தில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள கட்டளையை ஜனாதிபதி மற்றும் பிரதமர் விமர்சிப்பது தவறானதொரு எடுத்துக்காட்டாகும். நீதிமன்றத்தின் உத்தரவுக்குஅமையஜனாதிபதியால் செயற்பட முடியும்.

தான் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதால் பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்க முடியாது என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் அவர் ஜனாதிபதி பதவிக்கான எந்த பணிகளையும் முன்னெடுக்க முடியாது. அரசமைப்புக்கு அமைய 14 நாட்களை வரையறுத்து பதில் பொலிஸ் மா அதிபரை ஜனாதிபதியால் நியமிக்க முடியும்.

தேர்தல் கடமைகளுக்கு பொலிஸாருக்குகட்டளைபிறப்பிக்க பொலிஸ் மா அதிபர் அவசியம் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். அரசமைப்பின் 104 மற்றும் 109 பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய தேர்தல் பணிகளுக்கு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு. ஆகவே பொலிஸ் மா அதிபருக்கு உயர்நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடை தேர்தல் பணிகளுக்கு எவ்வித பாதிப்பையும்ஏற்படுத்தாது-என்றார்.

## சிறந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தில்நெகிழ்ச்சித்தன்மையைப் பின்பற்றியிருந்தோம். எனினும் எதிர்வரும் காலத்தில் நாம் ஒழுக்கம் சார்ந்த விடயங்களை கடுமையாக நடைமுறைப்படுத்துவோம்-என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சாதி, மத ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்கான முக்கியமான தேர்தலாக அமையும். தற்போது பழையஅரசியல்கட்சிகள்சம்பிரதாய முறையில்அரசியல்பரப்புரையைத் தொடரமுடியாதநிலைஏற்பட்டுள்ளது.

நம் நாட்டின் வரலாற்றில், பல கிளர்ச்சிகளும் உள்நாட்டுப் போர்களும் நடந்துள்ளன. கடந்த ஆட்சிக்கு எதிராக உள்நாட்டுப் போராட்டமும் நடந்தது. எனவே, மீண்டும்அதேபோன்றுமூன்றாவது உள்நாட்டுப்போர் போன்ற நிலமை உருவாகும் வகையில் மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்துவார்களா? அல்லது, அவ்வாறானதொரு சூழ்நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு செப்டம்பர் 21 தமது வாக்குகளைப்பயன்படுத்துவார்களா என்ற கேள்வி இலங்கை மக்கள் முன்னிலையில் உள்ளது.

அவர்கள் சம்பிரதாயபூர்வமாக தமது அரசியல் சித்தாந்தங்களின்படி செயற்பட்டாலோ இல்லாவிடில் இலங்கை சமூகத்தில் நிலவும் குலம், சாதி என்பவற்றை வைத்து அரசியல்நோக்கில்செயற்பட்டாலோ மூன்றாவதுஉள்நாட்டுப்போரொன்று வெடிப்பதற்கான பொறுப்பை சம்பந்தப்பட்ட தரப்பினர் ஏற்க வேண்டும் என்பதை இந்நாட்டு அரசியல் கட்சிகள் நினைவில் கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் நாடு வங்குரோத்தான போது, நாட்டைக் கட்டியெழுப்பும்பொறுப்பைஎதிர்க்கட்சிகள்ஏற்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தனி உறுப்பினராக அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ரணில் விக்ரமசிங்க, நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றார்.

2022 ஜூலை 22, 08 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தினால் நியமிக்கப்பட்டு நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பின்னர் வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பபலமறுசீரமைப்புகள்அறிமுகப்படுத்தப்பட்டன. பொருளாதார பரிமாற்றச் சட்டம் அவற்றில் விசேடமானது. அதை ஒதுக்கி எந்த அரசியல்கட்சியும்செயல்படமுடியாது. 2027 இல், நம் நாடு வங்குரோத்து நாடாகஅறிவிக்கப்பட்டு5ஆண்டுகள் நிறைவடையும்.

பொருளாதார பரிமாற்றச் சட்டத்தின்படி, 2027ஆம் ஆண்டுக்குள்நாட்டின்பொருளாதார வளர்ச்சி5% ஆக இருக்கவேண்டும். பொருளாதார பரிமாற்றச்சட்டத்தின் மூலம் இதுவரை நாட்டை ஆட்சி செய்த கட்சிகளுக்கு இல்லாதிருந்த ஓர் அம்சமான பொறுப்புக்கூறல் இந்தச் சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தச் சட்டத்தின்படியே எந்தக் கட்சியும் தனது கொள்கைகளை முன்வைக்கவேண்டும்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகம், தொழில்துறை முறைமை, ஆசியா மற்றும் உலகத்துடன் போட்டியிடும் செயல்முறையை உள்ளடக்கிய வேகமான பொருளாதாரத்தை உருவாக்குவதே இந்தப் புதிய பொருளாதார பரிமாற்றச்சட்டத்தின் நோக்கமாகும்.

இன்னும்சில அரசியல்கட்சிகள் மக்களை ஏமாற்றும் சம்பிரதாய முறையையேபின்பற்றிவருகின்றன. வரவுசெலவுத்திட்ட அலுவலகச்சட்டம் மற்றும்பொருளாதார மாற்றச்சட்டம், அரச கடன் முகாமைத்துவச் சட்டம் போன்ற முக்கியமான சட்டங்களில் உள்ள கொள்கைகளை மீறி தங்கள் கொள்கைகளை பொதுமக்களிடம் முன்வைக்கின்றன. இதனால் இலங்கையை மீளக் கட்டியெழுப்ப முடியாத நிலை ஏற்படும். உதாரணமாக, பொருளாதார பரிமாற்றச் சட்டம், வரவுசெலவுத் திட்ட அலுவலகச் சட்டம் மற்றும் அரச கடன் முகாமைத்துவச் சட்டம் ஆகிய சட்டங்களுக்கு அப்பால் ஓர் அரசியல் பாத்திரம் இருக்க முடியாது.

நாடாளுமன்றின் 225 உறுப்பினர்களும் புதிய பொருளாதார பரிமாற்றச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொண்டாலும், அவர்கள் வெளியே வந்து வேறு விடயங்களைக் கூறுவது வருத்தமளிக்கிறது. நாட்டின் நிலைமையைப் புரிந்துகொண்டு அவ்வாறு செயற்பட வேண்டாம் என அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொள்கின்றேன். சாதி, மத,அரசியல் கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டைக் கட்டியெழுப்பும்தேசியத்திட்டத்துக்கு இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமது தனிப்பட்ட கொள்கை எதுவாக இருந்தாலும், அதனை அவ்வாறே வைத்துக்கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்பும் கொள்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தாமல், நாட்டைக் கட்டியெழுப்பும் நீண்ட கால வேலைத்திட்டத்திற்குஇணங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனைத்துத் தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்றார்.

## மக்கள் போராட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து போசிப்பதால் எந்த பயனும் கிடையாது எனவும் உடனடியாகஅவர்தனதுபதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என மக்கள் போராட்ட இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

அதன் ஊடக ஒருங்கிணைப்பாளர் சந்துன் எஸ்.ராஜபக்ச உள்ளிட்ட தரப்பினர் நேற்று பொலிஸ் தலைமையகத்தில் மனு ஒன்றை கையளிக்கச் சென்றிருந்தனர். ஆனால்அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர்.

அத்துடன்அப்பகுதியில்அவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்க முற்பட்டபோது பொலிஸார் அதற்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன் அவரிடமிருந்த மனுவையும் பொலிஸார் பலவந்தமாக பறித்தெடுத்தனர்.

பின்னர் அவர்களை அங்கிருந்து வெளியேற்றியதோடு, அப்பகுதியில் ஒன்றுகூடுவததை தடுத்து நிறுத்தும் வகையில் விசேட நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரணிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார்கள்.

அத்துடன் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களும் இதே நிலைப்பாட்டில்தான் உள்ளார்கள்.ஆகவே கட்சியின் பெரும்பான்மை நிலைப்பாட்டுக்கு மதிப்பளித்து சிறந்த தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுன ஆதரவுவழங்காவிடின்எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசதேர்தலில் வெற்றிப் பெறுவார். அவ்வாறான நிலைஏற்பட்டால்2022ஆம்ஆண்டு நிலவரமே மீண்டும் ஏற்படும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவார்கள். ஆகவேபொதுஜன பெரமுன சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும்,எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் போட்டி நிலவும். அரகலயவின் போது மக்கள் மத்தியில்ஜே.வி.பியினருக்குஇருந்த செல்வாக்குதற்போது முழுமையாக வீழ்ச்சியடைந்துவிட்டது.அனுரகுமார திஸாநாயக்கவின்பேச்சு கேட்பதற்கு அருமையாக இருக்கும் ஆனால் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

### எங்களின் முயற்சி வீணாகவில்லை:

# இம்ரான்கானை இலங்கைக்கு அழைத்து ஜனாஸா எரிப்பை முடித்து வைத்தோம்

### ஹரீஸ் எம்.பி. உரை



(நூருல் ஹுதா உமர்)

கொடுங்கோல்ஆட்சிசெய்த கோட்டாவினுடையகுகைக்குள் காலை 10 மணிக்கு சிங்கமாகச் சென்ற பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் எங்களுடைய இந்த முஸ்லிம்களை பற்ற வைக்கின்றீர்கள். சாம்பராக்குகின்றீர்கள். உங்களுக்கு கொடுக்கின்ற அவகாசம் இன்னும் பத்து மணித்தியாலங்கள் நான் வந்த விமானம் இன்னும் பத்து மணித்தியாலத்தில் பாகிஸ்தானுக்கு செல்ல வேண்டும். இல்லை என்றால் உலகில் உள்ள 54 முஸ்லிம் நாடுகளையும் ஒன்று திரட்டி உங்களை உலகின் சர்வதேச நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிறுத்துவேன் என எச்சரிக்கை விடுத்தார் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸ் தெரிவித்தார்.

அம்பாறை - இறக்காமம் பிரதேசத்தில் இடம்பெற்ற பள்ளிவாசல் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் அங்கு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

அன்று கொரோனாவால் சிக்கிய முஸ்லிம்களின் ஜனாஸா எரிக்கப்பட்ட போது நாங்கள் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தோம். வெள்ளைக் கொடிகளை ஏந்தி உரிமைக்காக ஏங்கி நின்றோம். மரணமானவர்களின் குடும்பங்கள் தனது மரணித்த உறவினரின் சாம்பல் தான் வீட்டுக்கு வரப்போகிறது என்று கவலையில் இருந்த போது கொடுங்கோல் ஆட்சி செய்தவர்களோடு நாங்கள் பேசியதுடன் மன்றாடினோம். அவர்கள் மறுத்த போது இந்த ஜனாஸாக்கள் எரிப்பதை தடுத்து நிறுத்த வேண்டும். என்பதற்காக நாங்கள் எங்களையே அடமானம் வைத்து பல்வேறு வேலைத் திட்டங்களில் இறங்கி பணியாற்றினோம்.

அதனொரு கட்டமாக தான் எமது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் அனைவரையும் பாகிஸ்தான் தூதுவராலயத்திற்கு அழைத்துச் சென்றோம். எங்களுக்கு உதவி கரங்கள் கொடுங்கள் என்று அவர்களிடம் கேட்டோம். கவலைப்பட வேண்டாம் என்று கூறி இலங்கைக்கு வந்து இந்த பிரச்சினையை தீர்ப்போம் என அன்றிருந்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் எமக்கு ஆறுதல் தெரிவித்தார். ஆனாலும் எமக்கு பக்கத்தில் இருக்கும் பெரிய நாடுகள் எதுவும் இந்த ஜனாஸா எரிப்பை நிறுத்த எமக்கு ஆதரவாக வரவில்லை என்பது வேதனையான விடயம்.

பாகிஸ்தான் பிரதமர் குறுகிய விஜயமாக இலங்கை வந்து இந்த பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்று இலங்கை அரசை வலியுறுத்தி வேண்டுகோள் விடுத்து அந்த வாக்குறுதிக்கு ஏற்ப பிரதமர் இம்ரான்கான் அவர்கள் இலங்கைக்கு வந்தது கொடுங்கோல் ஆட்சி செய்த கோத்தாவினுடைய அந்த குகைக்குள் சிங்கமாகச் சென்று காலையில் 10:00 மணிக்கு சந்தித்தபோது எங்களுடைய இந்த முஸ்லிம்களை பற்ற வைக்கின்றீர்கள், சாம்பராக்குகின்றீர்கள். உங்களுக்கு கொடுக்கின்ற அவகாசம் இன்னும் பத்து மணித்தியாலங்கள் நான் வந்த விமானம் இன்னும் பத்து மணித்தியாலத்தில் பாகிஸ்தானுக்கு செல்ல வேண்டும். இல்லையென்றால் உலகில் உள்ள 54 நாடுகளையும் ஒன்று திரட்டி உங்களை உலகின் சர்வதேச நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிறுத்துவேன் என எச்சரிக்கை விடுத்தார்.

பிரதமர் இம்ரான்கான் எங்களை நேரடியாக சங்கரில்லா ஹோட்டலில் மூன்று மணிக்கு சந்தித்தார். ஒருமார்க்கப்பற்றுள்ள தலைவராக பெருந்தலைவர் அஸ்ரப் இருந்தாரோ அதேபோன்று அன்று தஸ்பமணிவுடன் சுபஹானல்லாஹ் சுபஹானல்லாஹ் என்று சொல்லி எங்களுடன் பிரதமர் இம்ரான்கான் பேச ஆரம்பித்தார். இந்த நாட்டிலே முஸ்லிம்களுக்கு நடந்த அநியாயங்களை எமது தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட அங்கிருந்த எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாங்கள் அவரிடம் சொன்னோம். எங்கள் கதையைக் கேட்ட பின் அவர் கோத்தாவுடன் பேசிய விடயத்தை சொன்னார். நான் போவதற்கிடையில் ஒரு செய்தி வரும் என்று எண்ணுகின்றேன் என்று கூறி ஒரு பத்து நிமிடம் கழிந்திருக்கும் இப்போதைய வெளிவிவகார அமைச்சராக இருக்கின்ற அப்போதைய நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்கள் வந்து ஜனாஸா நல்லடக்கம் செய்ய அனுமதி ஜனாதிபதி தந்துவிட்டார் என்று கூறியதுடன் சுகாதார அமைச்சருக்கும் கட்டளையிடப்பட்டுள்ளது என்று சொன்னார். நாங்கள் எல்லோரும் அல்ஹம்துலில்லாஹ் என்று சொன்னோம். இதனால் பல லட்சக்கணக்கான முஸ்லிம்கள் இலங்கையில் சந்தோஷத்தில் பெருமூச்சு விட்டார்கள். - என்றார்.

(05)

## அஸ்ரப் மத்திய கல்லூரிக்கு ஹரீஸ் எம்.பி.நிதி ஒதுக்கீடு



(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸின் முயற்சியின் பயனாக ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் சம்மாந்துறை கல்வி வலய கமு/சது/ அல்-அஸ்ரப் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) சுற்றுமதில் நிர்மாணிக்க 02 மில்லியன் ரூபா நிதியில் புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கமு/சது/அல்-அஸ்ரப் மத்திய கல்லூரி அதிபர் எம். ஐ.எம்.மாஹிர், தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சுற்றுமதில் அரங்கு அமைக்கும் பணியை அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார்.



இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எம். ஜமீல் காரியப்பர், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.எல். முஸ்னி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எஸ்.எல் நிஷார், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ பாவா, வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர், சிரேஷ்ட ஆலோசகர் எம்.ஏ. கலீல்ரஹ்மான், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் சங்கத்தினர், பாடசாலை பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (05)



## சூரிய மின் உற்பத்தித் திட்டத்திற்கு எதிராக மக்கள் நேற்று போராட்டம்



மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தில் சூரிய மின் உற்பத்தியை விஸ்தரிக்கும் திட்டத்திற்கு எதிராக கிராம மக்கள் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று (திங்கட்கிழமை) போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.





நாவற்காடு கிராமத்தில் கடந்த 2022 ஒக்ரோபர் மாதம் திறக்கப்பட்டு இயங்கி வரும் சூரிய சக்தி மின் உற்பத்தி (சோலார் பவர்) நிலையம் மேலும் பல மடங்கு விஸ்தரிக்கப்படவிருப்பதாக கூறி சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையத்தை அண்டிய கிராம மக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த சூரிய மின் உற்பத்தியை விஸ்தரித்தால் தமது விவசாய நிலங்களுக்கும், குடியிருப் புக்களுக்கும் கிராம மக்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என தெரிவித்து இதன்போது தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இந்த விஸ்தரிப்பு திட்டத்தை நிறுத்தக் கோரி பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கையளித்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏமாற்று அரசியலின் விளைவு


அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்த்த ஆதரவு மொட்டுக் கட்சி எனப்படும் பொது ஜன பெரமுனவிடம் இருந்து கிடைக்கவில்லை. தாம் தனித்து ஒரு வேட்பாளரை நிறுத்துவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது. கட்சியினதும்ராஜபக்சக்களினதும்அரசியல்எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டுஅந்தத்தீர்மானம்எடுக்கப்பட்டிருக்கின்றது என்று கூறப்பட்டாலும் ரணிலின் வெற்றி மீது அந்தக் கட்சி கொண்டிருந்த அவநம்பிக்கையும் அவரிலிருந்து அது விலகிச் செல்வதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று என்பது ஆழமான உண்மை.

ஆபத்தான, நெருக்கடியான சூழலில் இருந்து இலங்கையைத் தானே மீட்டெடுத்தார் என்கிற ரணிலின் பரப்புரை, காட்டுக் கூச்சல் யார் மனதையும் தைத்ததாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம், இலங்கை அந்த நிலையை அடைவதற்கு அவரும் ஒரு காரணமாக, பங்காளியாக இருந்தார் என்பதே. ஆகவே தவறைத் திருத்த அல்லது சரிசெய்ய முயற்சித்த ஒரே காரணத்திற்காக அவரை ஆதரிக்கும் மனநிலையை மக்கள் பெறவில்லை. போதாக்குறைக்கு மக்களால் நிராகரிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட ராஜபக்சக்களினதும் மொட்டுக் கட்சியினதும் ஆதரவுடன் அவர் அதிகாரத்தைக் கைப்பற்றியதும், சர்வாதிகார அணுகுமுறைகளுடன் ஆட்சியைக் கடந்த இரண்டு வருடங்களாகத் தக்கவைத்ததும்கூட மக்கள் மனங்களில் நெருடலாகத் தொடர்கின்றது. அதனால்தான் அவர் கடந்த இரண்டு வருடங்களில் ஆற்றிய பணிகளின் முக்கியத்துவம் புரிந்தாலும் அவரை ஆதரிப்பதற்குப் பெரும்பாலானவர்கள் தயாராக இல்லை.

தன்னைப் பொது வேட்பாளராக நிறுத்த முயன்ற ரணில் இந்தத் தடவை எந்தவொரு தரப்பினதும் நம்பிக்கையையும் பெறவில்லை. ஏற்கனவே அவர் தமிழ்ச் சமூகத்தின் நம்பிக்கையை முற்றாக இழந்திருக்கிறார். நம்பிக்கைத் துரோகம் அதற்குக் காரணம். எதிர்க் கட்சி தரப்பில் இருக்கும் வரைக்கும்தமிழர்களின்உரிமைகளுக்காகவும்தீர்வுக்காகவும் பாடுபடக்கூடியவர் என்று தன்னைக் காட்டிக்கொண்ட அவர், அதிகாரத்திற்கு வந்ததும் அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தத்தைக்கூட முழுமையாக நடைமுறைப்படுத்த மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்தார். சிங்கள, பௌத்த பேரினவாதத்தைத் திருப்திப்படுத்துவதில் குறியாக இருந்தார். அதனால் தமிழர்களின் குறைந்தபட்ச ஆதரவைக்கூட அவரால் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கொவிட் காலத்தில் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களைஎரித்ததற்காகமன்னிப்புக்கேட்கும்நாடகத்தை அவர் அரங்கேற்ற முற்பட்டாலும் வழக்கம் போல அதற்குக் காரணமானவர்களை தண்டிக்க விடாது பாதுகாப்பதும், உயிர்த்த ஞாயிறுதின வன்முறைத் தாக்குதல்களுக்குக் காரணமானவர்களைக் கண்டறிந்து தண்டிப்பதற்குத் தயக்கம்காட்டி அது தொடர்பான விசாரணைகளை இழுத்தடிப்பதுமாக முஸ்லிம்களின் நம்பிக்கையையும் அவர் இழந்திருக்கிறார்.

இப்போது சிங்கள மக்களிடத்திலும் அவருக்கு ஆதரவில்லை. ரணில் நம்பத்தகுந்தவர்கள் அல்லர் என்றே அவர்கள் எல்லோரும் கருதுகின்றார்கள். ரணிலிடம் திறமை இருக்கலாம், நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கும் வல்லமை இருக்கலாம் ஆனால் ஆட்சியை நம்பிக் கொடுக்கக்கூடிய ஒருத்தர் அல்லர் அவர், அதிகாரத்திற்கு வரும் வரைக்கும் ஒரு கதையும் வந்ததும் மற்றொரு கதையுமாக அவர் வேடமாடக்கூடியவர் என்பதைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அதன் விளைவுதான் ரணில் இப்போது எதிர்கொண்டிருப்பது. அதனால்தான் மொட்டுக் கட்சி அவரைத் தனியே விட்டு விலகிச் சென்றது. தன்னைப் பாதுகாக்க வேண்டுமானால் ரணிலைப் பலிகொடுப்பதைத் தவிர அதற்கு வேறு மார்க்கங்கள் இருக்கவில்லை. எல்லோரையும் ஏமாற்றியே அரசியலைக் கொண்டு நடத்த முடியும் என்கிற கனவு சாத்தியமானதில்லை என்பதை ரணில் இனியாவது புரிந்துகொள்ளவேண்டும்.



## உருளைக் கிழங்கின் உயர்வு நிலை

**ஆர்.எஸ். நாராயணன்**

உருளைக் கிழங்கின் தோற்றம் தென் அமெரிக்காவின் ஆண்டீஸ் மலைத் தொடர். இந்த ஆண்டீஸ் மலைத் தொடர் என்பது, தென் அமெரிக்க கண்டத்தின் தென் பகுதியில் தொடங்கி, அதன் மேற்கு கரையின் முழு நீளத்துக்கும் - ஏறத்தாழ 9,000 கி.மீ. தொலைவுக்கு - ஏழு நாடுகள் வழியே பரந்து காணப்படும் பசுமைத் தோற்றம். தொல் சிறப்புள்ள மாயா நாகரிகத்தின் அடையாளம்.

கோதுமைத் தோற்றத்தை மையமிட்டு எவ்வாறு மெசப்பொட்டேமிய நாகரிகத்தின் மேன்மை பேசப்படுகிறதோ, அவ்வாறே மக்காச்சோளம், உருளைக்கிழங்கு தோற்றத்தை மையமிட்டு மாயா நாகரிகம் பேசப்படுகிறது. இங்கு கி.மு.5000 முதல் -6000 முதற்கொண்டே 'டெரசிங்' முறையில் உருளைக்கிழங்கு சாகுபடி நிகழ்ந்த சான்றுக் குறிப்புகள் உண்டு.

தென் அமெரிக்காவில் தோன்றிய பயிரான உருளைக்கிழங்கு, அவ்வளவு விரும்பி உண்ணும் ருசி இல்லை. இந்த உருளைக்கிழங்கை "ஆண்டீஸ் கிழங்கு'' என்று தென் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு எடுத்து வந்து அறிமுகப்படுத்தியது கொலம்பஸ்தான்.

ஆண்டீஸ் உருளைக்கிழங்கை ஸ்பானியர்கள் புறக்கணித்தாலும், அயர்லாந்தில் சற்று வரவேற்பைப் பெற்றது. பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளிலும் வரவேற்பு இல்லை.

அயர்லாந்து விவசாயிகள் தொடர்ந்து 16, 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் திரும்பத் திரும்ப சாகுபடி செய்து எல்லோரும் விரும்பி உண்ணக் கூடிய ருசிமிக்க உருளைக்கிழங்கை உருவாக்கினார்கள். அதன் பின்னர், 19-ஆம் நூற்றாண்டில் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் ஐரிஷ் உருளை விரும்பி சாகுபடியானது. ஆண்டீஸ் காட்டு ரக உருளை இவ்வாறு ஐரிஷ் நாட்டு ரக உருளையாகி உலகில் பரவியது. இப்படிப் பரவக் காரணம், ஐரிஷ் பஞ்சம்.

உலக வரலாறில் மிகக் கொடிய பஞ்சம் 1845-முதல் 1849 வரை ஐந்தாண்டுகள் அயர்லாந்தில் ஏற்பட்டு, சுமார் 10 லட்சம் மக்கள் பசியால் மடிந்தனர். சுமார் 20 லட்சம் பேர் நாட்டைவிட்டு வெளியேறி, பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம், இத்தாலி ஆகிய இடங்களில் குடியேறியபோது தங்களின் கூடவே கொண்டு வந்த உருளைக்கிழங்கை சாகுபடி செய்து, ஐரோப்பிய மக்களை ஏற்கச் செய்தனர். பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் ருசி மிக்க உருளைக்கிழங்கை சாகுபடி செய்து ஐரோப்பியர்களின் நெஞ்சை நெகிழச் செய்துவிட்டனர்.

தொழில்புரட்சி காலகட்டத்தில் தொழிலாளர்கள் ரொட்டிக்கு மாற்றாக உருளைக்கிழங்கை உண்டனர். பின்னர் போர்க்காலத்தில் கோதுமை தட்டுப்பாடு வந்தபோது உருளைக்கிழங்கு உணவுப் பிரச்னையைத் தீர்த்து வைத்தது.

இதில் வியப்புக்குரிய விஷயம், தென் அமெரிக்காவின் வெப்ப மண்டலப் பயிரான ஆண்டீஸ் உருளை ஐரோப்பாவின் குளிர் மண்டலம் பயிராகப் பரவியதுதான். அதுமட்டுமல்ல, ஐரோப்பாவைவிட அதிகம் குளிர் நிறைந்த கனடா, ரஷியா, ஸ்காண்டிநேவியா (டென்மார்க், நார்வே, ஸ்வீடன் உள்ளிட்ட பிரதேசம்), அலாஸ்கா, கிரீன்லாந்து, ஹங்கேரியிலும் பரவியது.

### இலங்கை அறிமுகம்:

ஆங்கிலேயர்களின் பிடியில் இலங்கை இருந்தபோது 1850களில் உருளைக்கிழங்கு அறிமுகம் செய்யப்பட்டது. மலையகத்தில்தான் முதன் முதலில் செய்கை பண்ணப்பட்டது. ஆனால் முதல் முயற்சி அவ்வளவு வெற்றிகரமாக அமையவில்லை. இருந்தாலும் விவசாயிகள் பெரும் போகத்திற்குத் தேவையான விதை கிழங்குகளை அப்போது உற்பத்தி செய்துகொண்டார்கள்.

1865இல் இலங்கையில் 795 ஏக்கர் நிலப்பரப்பில் 4,732 தொண் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டதாக தரவுகள் உள்ளன. படிப்படியாக அந்த உற்பத்தி அளவு அதிகரித்து வந்திருக்கின்றது. நுவரெலியா மாவட்டத்தில்தான் அதிகளவில் இன்றும் உருளைக்கிழங்கு உற்பத்தி இடம்பெறுகின்றது. அது தவிர பதுளை, யாழ்ப்பாணம், புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றது. இருந்தாலும் நாட்டின் உருளைக்கிழங்குத் தேவைக்கு பெரும்பாலும் இறக்குமதியையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. பெரும்பாலும் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்படுகின்றது.

இலங்கையில் மட்டுமல்ல இந்தியா, சீனா உள்பட பல்வேறு ஆசிய நாடுகளிலும், வட அமெரிக்காவிலும் காலனி ஆதிக்கம் செய்த ஐரோப்பியர்களால் ஐரிஷ் உருளைக்கிழங்கு அறிமுகமாகி சாகுபடியானது.

உலகநாடுகளின் உருளைக்கிழங்கு ஒட்டுமொத்த உற்பத்தி சுமார் 40 கோடி டன். அநேகமாக உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் உருளைக்கிழங்கு உற்பத்தி உண்டு. முதலிடத்தில் 9.5 கோடி டன் உற்பத்தியுடன் சீனா உள்ளது. இந்தியா 5.4 கோடி டன் உற்பத்தியுடன் இரண்டாமிடத்தில் உள்ளது. மூன்றாமிடத்தில் ரஷியா (3 கோடி டன்), நான்காமிடத்தில் உக்ரைன் (2.2 கோடி டன்), ஐந்தாமிடத்தில் 2 கோடி டன் உற்பத்தியுடன் அமெரிக்கா உள்ளது.

### நல்வாழ்வுக்கு உருளை

உருளைக்கிழங்கை சிலர் 'வாயு' பண்டம் என ஒதுக்குவர். அது உண்மை இல்லை. இதில் மாவுச் சத்து உள்ளதால், அந்த அளவுக்கு அரிசி சாதத்தைக் குறைத்து சாப்பிட்டால் பிரச்னை இல்லை. கொழுப்பு, கொலஸ்ட்ரால் இல்லை. புரதச் சத்துடன் முக்கிய தாதுப் பொருள்கள் வைட்டமின் பி, சி உள்ளன.

அதிக குருதி அழுத்தம், மலச்சிக்கல், நோய்களுக்கு இதுவும் மருந்தாகும். எடைக் கட்டுப்பாடு, நோய் எதிர்ப்புச் சக்தி என்று பல நன்மைகள் உண்டு.

தொழில் ரீதியாக சிப்ஸ், குளிரூட்டப்பட்ட வடலம், வற்றல், மாவு என்று பல இருப்பினும், சீவிய உருளைக்கிழங்கு வறுவல் என்கிற சிப்ஸ் தொழிலே பிரதானம். பெப்சியின் லேஸ், கெல்லோகின் பிரிங்கிள் போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் பங்கு அதிகம். பிங்கோ - ஐ.டி.சி, ஹல்திராம், புதானி, பார்லே போன்றவையும் கணிசம்.

### ருசி, அன்றும் இன்றும்

கடந்த 50 ஆண்டுகளில் இந்தியாவில் உருளைக்கிழங்கு உற்பத்தி 100 மடங்கு உயர்ந்திருக்கலாம். ஆனால் ருசியை இழந்துவிட்டது. 1980 வரையில்கூட நல்ல ருசி இருந்தது. வெந்ததும் தோலை நீக்கி சமைத்தால் உதிர் உதிராக மாவாகி ஒரு தனி ருசி.

இப்போது விற்கப்படும் கிழங்குகளை சமைத்தால் முன்பு போல் மாவாக உதிராமல் சற்று பிசுக்காகவும், கரையாமல் சிறுசிறு கட்டிகளாகவும், ருசி குறைந்தும் உள்ளன. இதை எவ்வளவு பேர் கவனிக்கிறார்கள் என்று தெரியாது. ஏனெனில் அன்று பயிரிட்ட ஐரிஷ் நாட்டு ரகம் இன்று இல்லை.

இன்று ஏராளமாக வீரிய ரக உருளைக்கிழங்குகளே சாகுபடியாகின்றன. பழைய ரகமாவுப் பொருள் மலர்ந்து, உதிர் உதிராக ருசித்தது. ஆனால், தொழில் ரீதியாக வறுவலுக்கு ஏற்ற ரகமாக, கெட்டித்தன்மையுடன் சற்று பிசுக்குள்ள ரகங்கள் விரும்பப்பட்டன. தவிரவும், கெட்டித்தன்மையுள்ள வீரிய ரகங்கள் சீக்கிரம் அழுகிவிடாது.

உற்பத்தி உயர வேண்டுமானால் நாமும் நமது நாக்கைக் கட்டுப்படுத்தி, 'உருளைக்கிழங்கு என்று ஒன்று கிடைக்கிறதே என்று ஆறுதல் கொள்வோம்!

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி திருகோணமலையில் ஆர்ப்பாட்டம்













திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று (திங்கட்கிழமை) காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுதுடன் ஆர்ப்பாட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பலர் பங்குபற்றியிருந்தார்கள்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்களுக்கான நீதி வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தியும் சர்வதேச பொறிமுறையை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன் 'உங்கள் இராணுவத்தை நம்பி கையில் ஒப்படைத்த எங்கள் பிள்ளைகள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டார்கள்?' காணாமல் போனவர்களின் குடும்பங்களை மிரட்டுவதையும், அச்சுறுத்துத்துவதையும் நிறுத்துங்கள்' நாங்கள் கேட்பது இழப்பீடுகளையோ மரணச்சாண்றிதழையோ அல்ல முறையான நீதி விசாரணையையே! என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும், கோசங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் இம்மாதம் 24ஆம் திகதி முதல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிவரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கோரி அவர்களின் உறவுகளால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சம்மாந்துறையில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் நடத்திய சேவைநயப்பும் கல்விசாதனையாளர்கள் கௌரவிப்பும்



(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் வட்டம் நடத்திய சேவை நலன்பாராட்டு விழாவும் கல்வி சாதனையாளர்கள் கௌரவிப்பு விழாவும் ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஆசிரியர் எம்.ஏ.எம்.றக்கீப் தலைமையில் சம்மாந்துறை வலய ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர் இசட்.எம்.றிஸ்வி ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 34 வருடங்கள் கல்வி சேவையாற்றி ஓய்வுபெற்ற சம்மந்துறை வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.கபூர் பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

அடுத்து கல்வி சாதனையாளர்கள் பாராட்டு விழாவில் சம்மாந்துறை வலயத்தில் 25 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வெள்ளி விழாக் கண்ட ஒரே ஓர் உதவிக் கல்விப் பணிப்பாளரும் சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றிய தலைவருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா பொன்னாடை போர்த்தி நினைவுசின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும்,கல்வி சேவையாற்றிய முன்னாள் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம்.ஏ.சபூர்தம்பி, மறைந்த ஆசிரிய ஆலோசகர் அசீஸ்( இறக்காமம்), பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம் .வை.அரபாத் முகைடீன் ,ஏ.எல்.மஜீத், எம்.என்.நாசீர்அலிமற்றும்ஆசிரியர்வளநிலையமுகாமையாளர் எஸ்.சிவேந்திரன் ஆகியோரும் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.



மேடையில் முன்னிலை அதிதியாக கலந்து கொண்ட ஆசிரிய ஆலோசகர் றிஸ்வி செயின் விழா பற்றி அழகாக எடுத்துரைத்தார்.

பாராட்டு பெற்ற அதிதிகளின் உரைகளும் இடம்பெற்றன. சேவை நலன் பாராட்டைப் பெற்ற ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கபூர் ஏற்புரை வழங்கினார்.

சுமார் 300 ஆரம்ப கல்வி ஆசிரியர்கள், வலயக்கல்விப் பணிமனையின் கல்விசார் உத்தியோகத்தர்கள், அதிபர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள். (05)







## பொலிஸ் மா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று செய்தியாளர்களை அழைத்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் மா அதிபர் விவகாரம் தொடர்பில் சபாநாயகரும் பிரதம நீதி அரசரும் கலந்துரையாடி தீர்வு காணப்படவேண்டும்எனஜனாதிபதி தெரிவித்திருக்கும்கருத்துஜனநாயக முறைமைக்கு பொருத்தம் இல்லை. அவ்வாறு செயற்படுவது ஜனநாயக முறைமைக்கு முரணானதாகும். என்றாலும் இந்த பிரச்சினையை சபாநாயகருக்கும் பிரதம நீதியரசருக்கு தீர்க்க முடியுமான பிரச்சினையாக இருக்கும் என நான் நம்பவில்லை.

நாட்டின் தேசிய பாதுகாப்பு முக்கியமாகும். நாட்டின் தேசிய பாதுகாப்பு மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பதனை எம்மால் உறுதிப்ப-டுத்த முடியாதிருக்கிறது. ஏனெனில் நாட்டுக்குள் சர்வதேசத்துடன் தொடர்புடைய சிக்கல்கள் இருக்கின்றன. அதேபோன்று பொலிஸாராலும் இராணுவத்தாலும் கட்டுப்படுத்த முடியாமல் போயிருக்கும் கொலை, கொள்ளைசம்பவங்கள்இடம்பெற்று வருகின்றன.

அதனால் தேசிய பாதுகாப்பை சாதாரணமாக கருதி செயற்பட அரசாங்கத்துக்கோ நாட்டு தலைவருக்கும் உரிமை இல்லை. அதனால் பதில் பொலிஸ்மா அதிபர் நியமனத்தை விரைவாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம்ஒன்றைஎழுதிஅனுப்பினேன்.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர், முற்படைகளின் தலைவர் மற்றும் நாட்டின் ஜனாதிபதி என்றவகையில் அரசமைப்பின் மூலம் அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் பிரகாரம் அவர் உடனடியாக பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமித்திருக்க வேண்டும்.

அவ்வாறு நியமிக்காமல் இருப்பது, அவர் அரசமைப்பை மீறுவதாகும். அவர் ஜனாதிபதியாக சத்தியப்பிரமானம் செய்யும்போது, அரசமைப்பை பாதுகாத்து பின்பற்றுவதென்ற சத்தியப்பிரமாணத்தை மீறும் செயலாகும்.

ஜனாதிபதி வேட்பாளராகப் பெயரிடப்பட்டாலும் ரணிலுக்கு ஜனாதிபதியின் கடமைகளை, புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படும்வரை முன்னெடுக்க முடியும். பொலிஸ் மா அதிபர் பதவி தொடர்பில் நீதிமன்ற தீர்ப்பும் ஜனாதிபதி தனது அதிகாரத்துக்கு அமைய செயற்பட முடியும் என்ற வகையிலேயேவழங்கி இருக்கிறது.

அதனால் புதிய பொலிஸ் மா அதிபர் ஒருவரையோ அல்லது பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரையோ விரைவாகநியமிப்பதுஜனாதிபதியின் கடமை. அதனை அவர் செய்யாமல் இருப்பது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

## ரணிலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது ஜன பெரமுன தாமரை மொட்டுச் சின்னத்தில் பயணிக்கவேண்டும்என்றநிலைப்பாட்டிலும், மஹிந்த அண்ணாவின் கொள்கையுடன்செயற்படவேண்டும் என்ற உறுதிப்பாட்டிலும் வலுவான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு நாமல் ராஜபக்ச காரணமாக இருக்கின்றார்.

எந்த வகையிலும் நல்லாட்சி சூத்திரதாரியை ஆதரிப்பதில்லைஎன்றும்அவரைமுன்னிலைப் படுத்துவதில்லைஎன்பதிலும்ராஜபக்ச குடும்பம் உறுதியாக உள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் சேவைக் காலத்தில் 52 நாட்கள் மாத்திரமே எஞ்சியுள்ளன. இதன் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படும். அவ்வாறான நிலையில் தற்போது மொட்டுவை விட்டுச்சென்றவர்கள் மீண்டும் நாடாளுமன்றம் செல்வதற்கு ஒருகட்சி இருக்கவேண்டும். தற்போதையநிலையில்நாடாளவிய ரீதியில்வலையமைப்பைக்கொண்ட கட்டமைப்புடன் பொது ஜன பெரமுனவே உள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட மொட்டுக் கட்சியின் தலைவரால் உடனடியாக ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்டத் தலைவராக மாற முடியும். ஏனென்றால் அக்கட்சிக்குரிய அங்கத்தவர்கள் உள்ளனர். இதுதான்பிரச்சினை. இதனால்தான் மொட்டுக்கட்சியின் ஆதரவுத்தளம் அவ்வாறே உள்ளது என்றார்.

## தபால் மூல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். நிச்சயிக்கப்பட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மீள்பரிசீலனை இல்லாமல் இரத்து செய்யப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

தபால்மூல வாக்களிப்பு குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு 2024 ஆம் ஆண்டுக்கான புதிய தேருநர் இடாப்பு (வாக்காளர் இடாப்பு) பயன்படுத்தப்படும்.தபால் மூல வாக்காளரின் நலனுக்காக நாடளாவிய ரீதியில் உள்ள சகல தேர்தல் தொகுதிகளுக்கு உரிய 2024 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு 2024.07.26 ஆம் திகதி முதல் அலுவலக நேரத்தின் போது அனைத்து மாவட்ட செயலாளர் காரியாலயம் (கச்சேரி),பிரதேச செயலாளர் காரியாலயம்,கிராம சேவகர் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு மேலதிகமாக அரச நிர்வாகம்.உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள்,உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சு, தொழில் திணைக்களம், பதிவாளர் ஆணையாளர்திணைக்களம்,தபால் தலைமையகம், கடற்றொழில் மற்றும்நீர்வழங்கல் அமைச்சு,நகர அபிவிருத்தி ஆகிய அரச நிறுவனங்களின் காரியாலயங்களில் உரியதகவல்களைபெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் தேர்தல்கள் ஆணைக்குழுவின்உத்தியோகபூர்வ வலைத்தளம்....ஊடாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.அனைத்துமாவட்டங்களின் தபால் மூல வாக்காளர்களின் விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

தபால்மூல வாக்களிப்பு வசதியை பெற்றுக் கொள்வதற்காக பூரணப்படுத்தப்பட வேண்டிய விண்ணப்ப படிவத்தை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.அத்துடன் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தின் ஊடாக விண்ணப்பங்களை தரவிறக்கம் செய்துக் கொள்ள முடியும்.

தபால் மூல வாக்களிப்புக்கு தகுதி பெற்றுள்ள வாக்காளர்கள் 2024.08.05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் இறுதி தினத்தற்கு அதாவது 2024.08.05 ஆம் திகதி நள்ளிரவு12மணிக்குமுன்னர்உரிய மாவட்ட தேர்தல் காரியாலயத்துக்கு கிடைக்கப் பெற வேண்டும்.

2024.08.05 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மீள் பரிசீலனை செய்யாமல் இரத்து செய்யப்படும்.ஆகவே விரைவாக விண்ணப்பங்களை உறுதிப்படுத்தும் அலுவலர் ஊடாக உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு சமர்ப்பிக்கநடவடிக்கைஎடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டபிரபஞ்சம்,சக்வல போன்ற வேலைத்திட்டங்களை நிறுத்துமாறு தேர்தல்ஆணைக்குழு அறிவித்துள்ளது. அதனை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆனால் ஆளும்தரப்புக்கு இந்தச் சட்டம் ஏற்புடையது இல்லையா? ஹோமாகம பிரதேசத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டத்தில்ஜனாதிபதிகலந்து கொண்டதுசரியா?ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவால் இவ்வாறான வேலைத்திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. எனவே தேர்தல் ஆணைக்குழு இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

இந்நிகழ்வில்ஆற்றியஉரையில் நீதிமன்றத்தின் உத்தரவை திரிபுபடுத்தி பேசியுள்ளார். சபாநாயகரும், பிரதம நீதியரசரும் பேசி தீர்மானிக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இது தவறான விடயமாகும். வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளஒருபிரச்சினைக்கு கலந்துரையாடிதீர்வுகாணமுடியாது. நீதிமன்றத்தின் இடைக்கால தடையுத்தரவுக்கு அனைவரும் மதிப்பளிக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் அதனை மீறினால், மக்களும்அதனையேபின்பற்றுவர்.

நீதிமன்றத்தை கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி தனது நிறைவேற்றதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளார். நீதிமன்றத்தின் உத்தரவை ஆளும்தரப்புப் பின்பற்றாவிட்டால், அடுத்த கட்ட நடவடிக்கைக்குசெல்லவேண்டும். காரணம் தண்டனை சட்டக்கோவையின் கீழ் நீதிமன்ற உத்தரவை மீறுவது குற்றமாகும். எனவே சட்டத்தின் ஆட்சியை கேள்விக்குட்படுத்த வேண்டாம் என ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

## 50 லட்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகளில் 50இலட்சம் வாக்குகள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வாக்குகளாகும். அந்த 50இலட்சம் வாக்காளர்களுக்காக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு யாரும் இல்லாத காரணத்தினால் நான் முன்வந்தேன். அதனால் நாங்கள் இந்த தேர்தல் பரப்புரையை 50 இலட்சம் வாக்குகளை அடிப்படையாகக்கொண்டே ஆரம்பித்திருக்கிறோம்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் அரசியல் சபையின் 15 பேரில் 12 பெர் என்னுடன் இருக்கின்றனர். ஏனைய 3பேர்அமைச்சர்நிமல்சிறிபாலவுடன் இருக்கின்றனர். 240 பேர் கொண்ட கட்சியின் நிறைவேற்று சபையில் 20க்கும் குறைவானவர்களே நிமல் சிறிபாலடிசில்வாவுடன் இருக்கின்றனர். என்னுடன் 220க்கும் அதிகமானவர்கள் இருக்கின்றனர். அதேபோன்று மாவட்ட அமைப்பாளர்களை நாங்கள் சந்தித்துக் கலந்துரையாடி வருகிறோம். அவர்களில் இரண்டு அல்லது 3 பேரே பிரிந்து இருக்கின்றனர். ஏனையவர்கள் அனைவரும்எம்முடனே இருக்கின்றனர்.

நாங்கள் தேர்தல் பரப்புரையை முன்னெடுத்துச்செல்லும்போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த அனைவரும் எம்முடன் இணைந்துகொள்ள வேண்டிய ஏற்படுகிறது. தேர்தலில் ரணில் விக்ரமசிங்க வெற்றிபெற்றாலும் தோலியடைந்தாலும்நிமல்சிறிபாலடி சில்வாவின்குழு தோல்வியடையும். ஏனெனில் அடுத்து இடம்பெற இருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் அவர்களுக்கு போட்டியிட ஒரு கட்சியேனும் இல்லாத நிலையே ஏற்படப்போகிறது.

அதனால் அனைவரும் ஐக்கியப்பட்டு ஓர் அணியாக செயற்பட வருமாறு நான் பகிரங்கமாக அவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தேன். என்றாலும் மறுபக்கத்தில் இருப்பவர்கள்மீதுஊழல்குற்றச்சாட்டு இருக்கிறது. நீதிமன்றங்களில்வழக்கு நடவடிக்கைகள் இருக்கின்றன. அவற்றுக்குஎன்னிடத்தில்நிவாரணம் கிடைக்கப்போவதில்லை என்பது அவர்களுக்கு தெரியும்.

அத்துடன் மொட்டு கட்சியில் மஹிந்த ராஜபக்சவுக்கு என 10, 15இலட்சம் நிலையான வாக்குகள் இருக்கின்றன. அது அவர்கள் நிறுத்தப்போகும் வேட்பாளரை பொறுத்தே கிடைக்கும். என்றாலும் தற்போது அந்த கட்சியில் கேட்கப்போவதாக தெரிவிக்கும் நபருக்கு அந்த ஆதரவை பெற்றுக் கொள்ளமுடியாதுஎன்பதுஎங்களுக்கு தெரியும்.

இவை அனைத்தையும்விட இலங்கைவரலாற்றில்இந்ததேர்தல் வரலாற்று முக்கியமான தேர்தல், மக்கள் இந்த தேர்தலில் தேசிய வளங்களை பாதுகாக்க முடியுமான தெளிவான தலைவர் யார் என கவனிப்பார்கள். அடுத்தபடியாக அவருக்கு இருக்கும் அறிவு மற்றும் ஆற்றலை மக்கள் கவனிப்பார்கள்.

அவர் ஊழல் மோசடிகளுடன் சம்பந்தப்பட்டவராஎன்றவிடயத்தை பார்ப்பார்கள். அடுத்ததாக வேட்பாளரின் அரசியல் முதிர்ச்சி நிலையை பார்ப்பார்கள். என்றாலும் தற்போதுள்ள வேட்பாளர்களைவிட மக்கள் முன்னிலையில் இருக்கிறார்கள். அதனால்தான் இந்த தேர்தல் பெறுபேறு நாட்டின் தலைஎழுத்தை தீர்மானிக்கக்கூடிய தேர்தலாக இருக்கும் என நாங்கள் தெரிவிக்கிறோம்.

சிலர் ஊழல் குறித்து பொய்யான கருத்துகளை வெளியிடுகின்றனர். ஊழலைக் கட்டுப்படுத்த நீதித்துறையும் பொலிஸாரும் உள்ளனர். ஊழலைகுறைக்கஅந்தத் துறைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஆசியாவிலேயே மிகவும் சக்திவாய்ந்த ஊழல் எதிர்ப்புச் சட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், 6 முதல் 12 அல்லது 15 வருடங்கள் வரை ஒரு தேசிய வேலைத்திட்டத்தின்படிநாம் ஒன்றிணைந்துசெயற்படவேண்டும். இதனால்தான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுயேச்சை வேட்பாளராகஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார்.

தாம் அதிகாரத்தைப் பெறுவதற்காக பொதுமக்களிடம் பொய் கூறுவதைஅரசியல்வாதிகள்நிறுத்த வேண்டும். இந்த வீழ்ச்சி அடைந்த நாட்டைக்கட்டியெழுப்பவேறுமாற்று வழிகள் இல்லை. அதன்போது, நாட்டை முதன்மைப்படுத்தி அனைத்து இலங்கையர்களும் ஒன்றிணைவது மிகவும் முக்கியமானது. ஜனநாயக நாட்டில் எந்த அரசியல் கட்சிக்கும் தனது கருத்தை வெளியிடும் சுதந்திரம் உள்ளது. ஆனால்நாட்டைமீண்டும் அவல நிலைக்குத் தள்ளுவதா? இல்லையா? என்பதைத் தெரிவு செய்வதற்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

வாக்காளர்கள் வெறுப்புடன் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லக்கூடாது. இந்தத் தேர்தல் யாரையும் பழிவாங்குவதற்காக நடத்தப்படும் தேர்தல் அல்ல. இந்த தேர்தல், வாக்குகளை பயன்படுத்தி நாட்டை தோற்கடிப்பதற்கான சந்தர்ப்பம் அல்ல என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும் என்றார்.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் துறையின் முன்னணி ஆராய்ச்சிவெளியீடானஅபாலைனர் (ABhaliner), உலகின் வேகமாக வளரும் துறைமுகமாக கொழும்பு துறைமுகத்தை முதல் காலாண்டில் குறிப்பிட்டுள்ளதாக கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே. டி. எஸ்.ருவன்சந்திர தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கொழும்பு துறைமுகம், 50 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டிய அவர், கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகள் அந்த முன்னேற்றத்தை எட்டுவதற்குத் தடையாகஅமையவில்லைஎனவும் செயலாளர் தெரிவித்தார்.

இரண்டு வருட முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று அவர் செய்தியாளகளைச் சந்தித்தபோதே இதனைக் குறிப்பிட்டார். அமைச்சின்செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு துறைமுகத்தின் செயற்பாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. கொழும்பு துறைமுகம் 2024 ஆம் ஆண்டில் 23.6% சிறந்த வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்துள்ளது. அதன்படி, கப்பல் துறையின் முன்னணி ஆராய்ச்சி வெளியீடான அபாலைனர், 2024ஆம்ஆண்டின் முதல் காலாண்டில் உலகின் சிறந்த வளர்ச்சியடைந்ததுறைமுகங்களில் ஒன்றாக கொழும்பு துறைமுகத்தை அறிவித்துள்ளது.

பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போதே இந்த முன்னேற்றத்தை அடைந்தோம். 2023ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபை 100 மில்லியன் அமெரிக்க டொலர் இலாபத்தைப்பதிவுசெய்துள்ளதுடன் 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் 50 மில்லியன் அமெரிக்க டொலர் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

நான்கு முனையங்களும் இந்த நடவடிக்கைகளுக்கு பங்களித்துள்ளன என்று கூறவேண்டும். இந்தடெர்மினல்களின்செயல்பாட்டு திறனை மேம்படுத்தும் பணியும் தற்போது நடைபெற்று வருகிறது. அதன்படி, ஈசிரி (சிஙீவீ) மற்றும் மேற்கு முனையத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன, மேலும் மேற்கு முனையத்தின் செயல்பாடு பெப்ரவரி 2025 இல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. கிழக்கு முனையம் மற்றும் வடக்கு துறைமுகத்தின் அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன், திருகோணமலை, காலி, காங்கேசந்துறை ஆகிய துறைமுகங்களிலும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023 உடன் ஒப்பிடும்போது விமான சேவைகளும் 25% முன்னேற்றமடைந்துள்ளன. இங்கு, பயணிகள் மற்றும் சரக்கு செயல்பாடுகள் கணிசமாக அதிகரித்துள்ளன. விமானங்களின் வருகை 2023 இல் 36 இல் இருந்து ஜூலை 2024 க்குள் 46% ஆக அதிகரித்துள்ளது என்றார்.


காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## தடுகம் ஓயாவிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

சீதுவைபொலிஸ்பிரிவுக்குட்பட்ட கிதிகொட பகுதியில் தடுகம் ஓயாவில் ஞாயிற்றுக்கிழமை ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என சீதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 45 முதல் 50 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் 05 அடி 10 அங்குலம் உயரம் உடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமானது, நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## தடுப்புக்காவலில் வைத்து சந்தேகநபர் மீது தாக்கு

### இரு பொலிஸார் பணியிடை நீக்கம்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பொலிஸ் நிலைய தடுப்பு காவலில், தடுத்து வைத்து சந்தேக நபர் ஒருவரை மூர்க்க தனமாக தாக்கிய குற்றச்சாட்டில் இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் தற்காலிக பணியிடை நீக்கம் செய்ய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர், கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் தடுத்து வைத்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த இளைஞன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று இருந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இளைஞனை தாக்கிய குற்றச்சாட்டில் இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் கைது செய்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், இருவரையும் தலா 50ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல மன்று அனுமதித்தது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் திணைக்கள ரீதியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், காங்கேசன்துறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் விசாரணைகள் முடிவடையும் வரையில் பணி இடை நீக்கம் செய்துள்ளார். (05)

## குருதிக்கொடை வழங்கி வைப்பு





விஸ்வமடு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினரின் ஏற்பாட்டில் வருடாந்தம் வழங்கப்பட்டவரும் குருதி கொடையின் மூன்றாவது வருடமான நேற்று (திங்கட்கிழமை) சிவில் பாதுகாப்பு திணைக்கள அலுவலகத்தில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினர் மற்றும் பொலீஸார் இராணுவத்தினர் இணைந்து 150 இற்கு மேற்பட்டவர்கள் குறுதி கொடையை வழங்கி வைத்தனர். (05-113)




காலைக்கதிர் Kalaikkathir

# சஜித் பிரேமதாஸ கலந்துகொள்ள இருந்த எட்டு கூட்டங்கள் அம்பாறையில் இரத்து






(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று (திங்கட்கிழமை) அம்பாறை மாவட்டத்தில் கலந்துகொள்ள இருந்த எட்டு கூட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

சக்வெல வேலைத்திட்டத்தின் கீழ் பின்தங்கிய பிரதேசத்தைச் சேர்ந்த எட்டு பாடசாலைகளுக்கு சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஸ்மார்ட் அறைக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகளே இவ்விதம் இரத்து செய்யப்பட்டுள்ளன என சஜித் பிரேமதாஸவின் இணைப்பாளர் வி. வினோகாந்த் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

முன் கூட்டியே இந் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஜனாதிபதி தேர்தல் விதிமுறைகளுக்கமைவாக இந் நிகழ்வுகள் இரத்து செய்யப்பட்டன.

அதாவது தேர்தல் ஆணையகத்தால் ஜனாதிபதி தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பிற்பாடு இத்தகைய நிகழ்வை நடத்துவது பொருத்தமற்றது என்ற காரணத்தால் இது இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

அம்பாறையில் இருந்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு சென்ற முறைப்பாட்டை அடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏழை மாணவர்களுக்காக இத்தகைய கல்வி உதவி வழங்கப்பட இருந்த இந்த நிகழ்வு நிகழ்வை தடை செய்தவர்கள் நாளை ஆட்சிக்கு வந்தால் இந்த கல்வியின் தலைவிதி எவ்வாறு தீர்மானிக்கப்படும் என்று தெரியாது .இருந்த பொழுதிலும் தேர்தல் நடைமுறை விதிகளுக்கு அமைவாக இந்நிகழ்வுகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. - என்றார். (05)

# பனம்பொருள் கைப்பணி உற்பத்திகள் புலம்பெயர் உதவியுடன் பயிற்சி நெறி.







(வி.ரி. சகாதேவராஜா)

புலம்பெயர் உறவுகளின் அனுசரணையில் திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட சங்கமன் கிராமத்தில் பனம் பொருள் கைப்பணி உற்பத்திகள் மூலமாக வாழ்வாதாரத்தை உயர்த்தும் பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கமன் கிராமத்தில் 40 பயனாளர்களுடன் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் ஏற்பாட்டிற்கமைய இவ் வாழ்வாதார பயிற்சிநெறியானது இன்றுவரை மிகவும் முன்னேற்றகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.



இதேபோன்று ஏனைய சில கிராமங்களிலும் இத்தகைய பயிற்சிநெறி எதிர்காலத்தில் ஆரம்பிக்கபட வுள்ளது.

இவ் வாழ்வாதார பயிற்சிநெறி 2 மாத கால எல்லையினை கொண்டதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.(05)

# இலங்கை மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட எழுச்சி மாநாடு



அகிலஇலங்கைமக்கள்காங்கிரஸின் புத்தளம் மாவட்ட எழுச்சி மாநாடு சனிக்கிழமைபுத்தளம்பிரதானவீதியில் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் ஏ.எச்.எம் நவவி தலைமையில் இடம்பெற்றபோது அகில இலங்கை மக்கள்காங்கிரஸின்தேசியதலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.









இதன் போது, கட்சியின் அரசியல் அதிகாரசபை உறுப்பினர்கள், உயர்பீட உறுப்பினர்கள், புத்தள மாவட்ட முக்கியஸ்தர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்டோருடன் பொது மக்கள் என பெரும் திரளான மக்கள்இந்தஎழுச்சிமாநாட்டில் கலந்துகொண்டனர்.(05)

# மு.காவின் ஆதரவு சஜித்துக்கே

## தௌபீக் எம்.பி. தெரிவிப்பு

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு இருக்கும் என காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் திருகோணமலைமாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தௌபிக் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தி ஒற்றுமையின்வேகத்துடன்செயற்பட்டு வருவதாகவும், யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் தமது கட்சியின் உயர் மட்ட குழு இறுதித் தீர்மானத்தை எட்டவில்லையென்றாலும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாகவும்அவர்தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் கட்சித் தலைவர் ரவூப்ஹக்கீம்உள்ளிட்டோர்ஏற்கனவே இணைந்து செயற்பட்டுள்ளதால், சஜித் பிரேமதாஸவுக்கு உயர் மட்ட குழுவிடமிருந்து ஆதரவு கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.(05)

# அடக்குமுறைக்குப் பரிகாரமின்றியே தமிழ் மக்கள் நாட்டில் வாழ்கின்றனர

## கறுப்பு ஜூலை நினைவேந்தலில் நிரோஸ்



கறுப்பு ஜூலை தமிழ் மக்கள் மீது இன ரீதியிலான திட்டமிடப்பட்ட அரச பயங்கரவாதம் பிரயோகிக்கப்பட்ட ஒரு வன்முறையாகும். இவ்வாறான ஏற்றுக்கொள்ள முடியாத துரதிஸ்ட நிலைமைகள் நாட்டின் வழமையாக இருந்துள்ள போதும் அவற்றுக்கு அரசு பொறுப்புக்கூறல் மற்றும் மீள நிகழாமை பொறிமுறையை உறுதிப்படுத்தாதமையால் தமிழ் மக்கள் ஆகிய நாம் உள்நாட்டில் மனக்கசப்புடனும் அதிருப்தியுடனும் அடக்குமுறையை சகித்தே வாழ்கின்றோம்.

- இவ்வாறு ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினரும் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் சனிக்கிழமை நடைபெற்ற கறுப்பு ஜூலை நினைவேந்தலில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் பல இனக் கலவரங்கள் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள போதும் கறுப்பு ஜூலை இனக்கலவரம் சர்வதேச கவனத்தை ஈர்த்ததாகக் காணப்பட்டது. அது முமையாக அரச திட்டமிடலிலேயே இடம்பெற்றது. அரசின் முழுக் கட்டுப்பாட்டில் காணப்பட்ட வெலிக்கடைச் சிறைக்குள் எமது இயக்கத்தின் தாபகத் தலைவர் தங்கத்துரை, தளபதிகளான குட்டிமணி, ஜெகன் உள்ளிட்ட தலைவர்களை நாம் ஆகுதியாக்கியுள்ளோம். அவர்கள் போன்ற செயல்வீரமும் அர்ப்பணிப்பும் தியாகமும் மிக்க தலைவர்களை எமது கட்சி மாத்திரம் இழக்கவில்லை. மாறாக தமிழ்த் தேசியமே இழப்பினைச் சந்தித்தது. தமது மரணத்தில் தம் கண்களை கொடையளித்து தமது கண்கள் மலரும் விடுதலை பெற்ற தாயகத்தைக் காணும் என கனவு கண்ட தலைவர்கள் கண்கள் பிடுங்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இவ்வாறாக தலைவர்கள் உள்ளிட்ட 53 பேரை அரச அனுசரணையில் கடும் சித்திரவதைகளுக்குள்ளாக்கி படுகொலை செய்தனர்.

வன்முறைகள் வாயிலாக ரயர்கள் பேட்டு எரித்து மூவாயிரம் தமிழர்களை அழித்தனர். 25 ஆயிரம் பேரை காயப்படுத்தினர். 50 ஆயிரம் பேரை உள்நாட்டில் சொத்துக்களை சூறையாடியும் கொன்றும் இடம்பெயர்ந்தோராக்கினர்.

இந்தச் சம்பவங்கள் அரசின் உயர்மட்ட திட்டமிடலிலேயே நடந்தன. அதற்கு உதாரணமாக, வன்முறைக்கு இரு வாரங்களுக்கு முன் (193 ஜூலை 11) லண்டனைத் தளமாகக் கொண்ட டெய்லி டெலிகிராப் பத்திரிகைக்கு பேட்டியளித்த அரசுத்தலைவர் ஜெயவர்த்தனா, தமிழ் மக்கள் விடயத்தில் தமக்குக் கவனம் கிடையாது. அவர்களுக்கு எது நடந்தாலும் சிங்கள மக்கள் மகிழ்வார்கள் என்று அரச பொறுப்புணர்வுத் துறப்பினை வெளிப்படுத்தினார். நடந்த சம்பவங்களை கண்காணிப்புக்கு உட்படுத்திய பன்னாட்டு நீதித்துறை வல்லுநர்கள் ஆணையம் நடைபெற்றவற்றை இனப்படுகொலை என சுட்டிக்காட்டியது.

இவ்வாறாக உள்நாட்டிலேயே எண்ணற்ற அநியாயங்களை எதர்கொண்டவர்களாக அவற்றுக்கான நீதிக்கு பல தசாப்தங்கள் கடந்தும் கிடைக்கப்பெறாது போராடும் ஓர் இனமாக நாம் வாழ்கின்றோம் என்பதே இன்றைய ஜதார்த்தம் என தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.(05)

## சேவைக்குச் சமுகமளிக்காமல் வீட்டிலேயே பதுங்கியிருந்த 3 பெண் சிப்பாய்கள் கைது

சேவைக்கு சமூகமளிக்காமல் மத்தேகொடவில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்த 22 வயதுடைய மூன்று பெண் சிப்பாய்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் கொக்காவில் மற்றும் சந்துன்புர இராணுவ முகாம்களில் கடமையாற்றும் ஹசலக்க, தெனிபிட்டிய மற்றும் பொல்கஸ்சோவிட்ட ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பொல்கசோவிட்டையைச் சேர்ந்த பெண் சிப்பாய் விடுமுறையில் சென்றிருந்த நிலையில், மற்றைய இருவரும் அவரைச் சந்தித்து பல நாள்கள் வீட்டில் தங்கியிருந்துள்ளனர்.

இந்நிலையில், வீட்டில் வசிப்பவர்கள் இவர்கள் தங்கி இருப்பதை 119 தொலைபேசி எண் ஊடாக பொலிஸாருக்கு தெரிவித்தனர்.

இதன்போது, பொலிஸாரின் விசாரணையில் பெண் இராணுவ சிப்பாய்கள் உண்மையிலேயே தங்கள் சேவையை விட்டு வெளியேறியது தெரியவந்தது. மேலதிக விசாரணைக்காக மூவரும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(05)

## மொனராகலையில் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

மொனராகலை, ஒக்கம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை, ஒக்கம்பிட்டிய பகுதியில் வசிக்கும் 31 வயதுடைய நபரொருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ 40 கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைது செய்யப் பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக ஒக்கம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.(05)

## பொதுநலவாயக் குழுவினருடன் முஸ்லிம் காங்கிரஸ் சந்திப்பு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பது தொடர்பில், அழைக்கப்படும் பட்சத்தில் அதற்கான பூர்வாங்க ஆயத்தங்களை மேற்கொள்வதற்காக தற்போது நாட்டிற்கு வருகைதந்துள்ள திருமதி லிண்டிவே மலேலேகா (அரசியல் ஆலோசகர்) தலைமையிலான பொதுநலவாய நாடுகளின் தேர்தல்கள் தொடர்பான ஓர் உயர் மட்டக் குழுவினர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோரை சனிக்கிழமை பிற்பகல் கட்சியின் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

பிரஸ்தாப ஜனாதிபதி தேர்தலைக் கண்காணிப்பதற்கான உத்தியோகபூர்வ அழைப்பைதாம் தேர்தல்கள் ஆணைக் குழுவிடமிருந்து எதிர்பார்த்திருப்பதாகவும், அதற்குமுன்னதாக இந்தத் தேர்தலோடு சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் பயனுள்ள கருத்துப்பறிமாறல்களில் ஈடுபடுவதன் ஊடாக குறிப்பாக தேர்தல் காலத்தில் எதிர் நோக்கப்படும் சவால்கள் எத்தகையன என்பன பற்றியும் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இதன்போது, அரசாங்க ஆளணி முறைகேடாக கையாளப் படக்கூடிய அபாயம் குறித்தும், அரசாங்கத்தின் உடைமைகள் துஷ்பிர யோகம் செய்யப்படக்கூடிய சாத்தியப்பாடுகள் குறித்தும் தூதுக்குழுனரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.



உயர் நீதிமன்றத்தின் இடைக்கால தடை யுத்தரவையடுத்து எழுந்துள்ள பொலிஸ் மாஅதிபர் விவகாரம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (05)

## வன்னி விழிப்புலனற்றோருக்கு உலர் உணவு பொதி வழங்கல்





(வி.ரி.சகாதேவராஜா)

வன்னிவிழிப்புலனற்றோர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினூடாக ஒரு தொகுதி உலருணவுப் பொதிகள் நேற்று (திங்கட்கிழமை) வழங்கி வைக்கப்பட்டன.

தனது பிறந்தநாளை கொண்டாடும் ஒந்தாச்சி மடத்தைச் சேர்ந்த கஜேந்திரன், ரஞ்சினி அவர்களின் அன்பு குழந்தைகளான க.திபிஷா, க.திபிஷன் க.தியான் ஆகிய மூன்று குழந்தைகளின் 04 ஆவது பிறந்த தினத்தை நேற்று முன்னிட்டு ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மாமாவால் இவ்வுதவி வழங்கி வைக்கப்பட்டது.

கிளிநொச்சியில் இயங்கி வரும் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தை சேர்ந்த அதிகஸ்ரத்தில் வாழ்ந்து வரும் குடும்பங்களை தெரிவுசெய்து, ஒருவருக்கு ஐந்தாயிரம் ரூபா பெறுமதியான, உலர் உணவுபொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.




இணைந்த கரங்கள் சார்பாக காந்தன், விவேக் ஆகியோர் கலந்துகொண்டு அவர்களுக்கு இதனைவழங்கி வைத்தனர். (05)

# சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தி மாணவி மாவட்ட மட்ட போட்டிக்குத் தெரிவாகினார்

(எஸ்.அஷ்ரப்கான்)

இம்முறை(2024)நடைபெற்றவலயமட்டத்திலான தமிழ்மொழித்தினப் போட்டியில் சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலய மாணவி கே.எப். நிஸ்கா முதலாம் பிரிவுக்குரிய வாசிப்புப் போட்டியில் கலந்து கொண்டு முதலாமிடத்தை பெற்று மாவட்ட மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

முதன்முதலாக இம்மாணவி இச்சாதனையை நிலை நாட்டியமைக்காக பாடசாலையின் அதிபர் பிரதி அதிபர்,உதவி அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இம்மாணவியைப் பாராட்டியுள்ளனர்.

அண்மைக்காலமாக இப்பாடசாலையின் அதிபர் ஜனாப்.எம்.ஐ.சம்சுதீன் தலைமையில் பல்வேறு வெற்றிகளை கல்வி மற்றும் இணைப்பாடவிதானம் ரீதியாக இப்பாடசாலை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# மாடுகளை சட்டவிரோதமாக லொறியில் ஏற்றிச்சென்ற இளைஞன் கைதானார்

களுத்துறை, புளத்சிங்கள பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி சட்டவிரோதமாக மூன்று மாடுகளை லொறியில் ஏற்றிச் சென்ற இளைஞன் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார் என புளத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

புளத்சிங்கள பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

களுத்துறை, பண்டாரகமை, அட்டுளுகம பகுதியில் வசிக்கும் 31 வயதுடைய இளைஞரொருவரே கைது செய்யப் பட்டுள்ளார்.கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர், அங்கு ருவாத்தோட்ட, புளத்சிங்கள மற்றும் அகலவத்தை ஆகிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மாடுகள் திருடப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புளத் சிங்கள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

டுபாயிலிருந்து இலங்கைக்கு வந்த பயணி ஒருவர் 24,000 மான்செஸ்டர் ரக சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஞாயிற்றுக்கிழமை மாலை டுபாயிலிருந்து இலங்கை வந்த போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் களுத்துறை பிரதேசத்தில் வசிப்பவர் என்பதுடன் இவர் கொண்டு வந்த சிகரெட்டுகளின் பெறுமதி 4,097,253 ரூபாவென தெரியவந்துள்ளது .

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட சிகரெட் கையிருப்பு சுங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# முஸ்லிம் ஜனாஸாக்களை எரித்தமை நாடாளுமன்றத் தெரிவுக்குழு தேவை

## முஸ்லிம் எம்.பிக்களிடம் கலீலூர் ரஹ்மான் கோரிக்கை



(நூருல் ஹுதா உமர்)

தகனம் தொடர்பான தீர்மானத்தை எடுத்த குழு உறுப்பினர்களிடம் விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்திற்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் 'நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை' நியமிக்க வேண்டும். அநீதியான சம்பவத்தை செய்த குழுவுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு சபாநாயகரிடம் சகல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து கோரிக்கை விடுப்பதற்கும், ஜனாஸாக்களை தகனம் செய்வது தொடர்பான தீர்மானத்தை எதிர்த்து முஸ்லிம் சமூகத்துக்கு நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலூர் ரஹ்மான் இலங்கை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித்தலைவர்கள், அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜரொன்றை அனுப்பியுள்ளார்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

உடல் உறுப்புகளை தகனம் செய்தல் மற்றும் உடல் உறுப்புகளை தானம் செய்வது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ள புதிய சட்ட விதிமுறைகள் மற்றும் கோவிட் சடலங்களை தகனம் செய்வது தொடர்பாக கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் பல விவாதங்கள் இடம்பெற்றதுடன், அங்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்பட்டது. ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் ஏற்படுத்தப்பட்ட 'பாராளுமன்றத் தெரிவுக்குழு' போன்று ஜனாஸா எரிப்பை விசாரிக்கவும் 'நாடாளுமன்றத் தெரிவுக்குழு' வேண்டும் என்று முஸ்லிம் எம்.பிக்கள் கூட்டு கோரிக்கையை இதுவரை முன்வைக்காரமை வருத்தமளிக்கிறது. உடல்களை தகனம் செய்ய திட்டமிட்ட குழுவுக்கு பின்னால் கண்ணுக்குத் தெரியாத சக்தி இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்ப்பது நாட்டுக்கு நல்லது.

இந்த தகனம் எமது நாட்டில் உள்ள முஸ்லிம் சமூகத்திற்கு அநீதி இழைத்தது என்பதையே உணர்த்துகின்றன. அந்த அநியாயம் நிகழ்காலத்தில் மட்டுமல்ல எதிர்காலத்திலும் முஸ்லிம் சமூகத்தின் இதயங்களைக் கிழிக்கும் வகையில் ஒரு கருத்தியல் ஆயுதமாக அரசியல் மேடையில் உள்ளது. அந்த சித்தாந்த ஆயுதத்தை பயன்படுத்தும் எந்த அரசியல் தலைவர்களும் தகனம் செய்யப்பட்ட குடும்ப உறுப்பினர்களை ஒரே இடத்தில் கூட்டி அவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்குவதற்குப் பதிலாக அல்லது உடைந்த இதயங்களை அணைப்பதற்கு பதிலாக, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் அவர்களின் இதயங்களை இன்னும் கொதிப்படையச் செய்கிறார்கள். எனவே நாங்கள் உங்களுக்கு முன்மொழிந்த 'பாராளுமன்றத் தெரிவுக்குழு' மூலம் வெளியிடப்படும் அறிக்கைகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் அவர்களின் குடும்பங்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறியதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளில் தகனம் செய்த குழுவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்பு கிறேன்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட 'ஒரு நாடு ஒரு சட்டம்' ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர் பதவியை நான் இராஜினாமா செய்த போது நான் எழுதிய கடிதத்தில், கொவிட் சடலங்களை தகனம் செய்வது குறித்தும் கேள்விஎழுப்பியிருந்தேன். நான்எழுதிய இராஜினாமா கடிதம் மற்றும் '06ஃ23ஃ2024' அன்று நான் எழுதிய கடிதம் 'ஜனாதிபதி ஆணைக்குழு' கோரி கௌரவ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு முழு இலங்கை முஸ்லிம் சமூகத்தின் சார்பாக நான் எழுதிய கடிதமும் எனக்கு அனுப்பப்பட்ட பதில் கடிதத்தில் திருப்தி அடைய முடியாதுள்ளது– என்று தெரிவித்துள்ளார்.(05)

# 5 வயதுக்குட்பட்ட 2,142 சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிப்பு

மத்திய மாகாணத்தின் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் ஐந்து வயதுக்குட்பட்ட 2,142 சிறுவர்கள் கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்தியமாகாணசுகாதாரசேவைகள் திணைக்களம்வழங்கியதகவலின்படி–

ஐந்து வயதுக்குட்பட்ட 2,142 சிறுவர்கள் கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில்,15,920 சிறுவர்கள் மிதமான போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 27,812 சிறுவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, கண்டி மாவட்டத்தில் 970 சிறுவர்களும், மாத்தளை மாவட்டத்தில் 461 சிறுவர்களும் , நுவரெலியா மாவட்டத்தில் 711 சிறுவர்களும் கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், கண்டி மாவட்டத்திலிருந்து 7626 பேரும் , மாத்தளை மாவட்டத்திலிருந்து 3716 பேரும், நுவரெலியா மாவட்டத்திலிருந்து 4588 பேரும் மிதமான போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி மாவட்டத்திலிருந்து 11,044 பேரும், மாத்தளை மாவட்டத்திலிருந்து 4051 பேரும், நுவரெலியா மாவட்டத்திலிருந்து 12,717 பேரும் ஊட்டச்சத்துகுறைபாடுள்ளசிறுவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், சுகாதார உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில், கடுமையான போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை கண்டி மாவட்டத்தில் 76 ஆகவும், யட்டிநுவர சுகாதார அதிகாரி பிரிவில் 68 ஆகவும், மாத்தளை மாவட்டத்தில் உக்குவெல சுகாதார அதிகாரி பிரிவில் 67 ஆகவும், வில்கமுவ சுகாதார அதிகாரி பிரிவில் 67 ஆகவும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் அதிகளவான ஊட்டச்சத்து குறைபாடுள்ளசிறுவர்களாககொத்மலை சுகாதார அதிகாரி பிரிவில் 89 பேரும் , லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 84 பேரும் பதிவாகியுள்ளனர்.

இந்த புள்ளிவிவரங்களின்படி நுவரெலியா மாவட்டத்தில் சிறுவர்களுக்கு போசாக்கின்மை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கனகாம்பிகைக் குளத்தின் ஒரு பகுதியை மண்நிரப்பி அடாத்தாகப் பிடிக்கும் நபர்

## பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கனகாம்பிகை குளத்தின் ஒரு பகுதி சட்டவிரோதமாக தனிநபர் ஒருவரால் மண் நிரப்பப்பட்டு அடாத்தாக பிடிக்கப்பட்டமைக்குஎதிர்ப்புத்தெரிவித்து பொது மக்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் ஏ9 வீதியில் கனகாம்பிகைகுளம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதியில் ஒன்று கூடிய பொது மக்கள் குளம் மண் நிரப்பட்டு அடாத்தாக பிடிக்கப்பட்டதைக்கண்டித்து ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

கிளிநொச்சிகனகாம்பிகைகுளத்தின் ஏ9 வீதியோடு அண்டியதாக சுமார் ஓர் ஏக்கர் பரப்பளவு குளத்தை தனிநபர் ஒருவர் மண் நிரப்பி பிடித்துள்ள நிலையில் குறித்த குளத்தின் பின்பகுதி முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், முரளிதரன், கரைச்சி பிரதேச செயலாளர் முகுந்தன். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோர் சென்றிருந்தனர். அங்கு பொது மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் குளத்தை அடாத்த பிடிக்கப்பட்டவரின் ஆவணங்களை பரிசோதித்த போது அவர்களிடம் அதற்கான எவ்வித ஆவணங்களும் இன்மையால் உடனடியாக இரண்டு நாள்களுக்குள் நிரப்பட்ட மண்ணை அகற்றி குளத்தை வழமைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மாவட்ட அரசாங்க அதிபர் முரளிதரன் பொலீஸ்பொறுப்பதிகாரிக்குபணிப்புரை வழங்கினார்.

குளம் ஆக்கிரமிக்கப்படுவதன்



பிரதேச செயலாளர் பிரிவுக்குட்ட பகுதியில் சுமார் 20 ஏக்கர் வரையான குளத்தின் பகுதிகளும் வேலியிட்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டே ஒன்று சேர்ந்த பொதுமக்கள் குளம் எங்களின் சொத்து, அனுமதிக்க மாட்டோம், அனுமதிக்கமாட்டோம் குளத்தை பிடிப்பதனை அனுமதிக்கமாட்டோம், விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் மண் அள்ளி போடாதே, என

மூலம் விவசாயிகள் மட்டுமல்ல சுற்றியுள்ள பொது மக்கள், உட்பட சுற்றுப்புறச் சூழல் கால்நடைகள் என எல்லாவற்றுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும். இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள் அனுமதித்தால் ஒருவர் இருவராகி இருவர் பலராகி எதிர்காலத்தில் குளமே காணமல் போய்விடும்இவ்வாறுபலகுளங்களுக்கு நடந்துள்ளது. எனவே இவ்வாறான நடவடிக்கைகளை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. – என்றார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.07.2024இல் வெளியிடப்பெற்றது